சார்பு நீதிமன்றம், பெருந்துறை

**OS 76/2021**

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 17.09.2025

Pw1 (தங்கராஜ் )

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சிட்டா மற்றும் அடங்கல் ஆவணங்களில் என் தகப்பனார் பெயர் தான் கண்டுள்ளது என்றால் ஆமாம். சொத்து வரி ரசீதுகளும் என் தகப்பனார் பெயரில் தான் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். உயில் எழுதிய விவரம் குறித்து என் தப்பனார் உயிருடன் இருந்தவரை எனக்கு சொல்லவில்லை, அவர் இறப்பிற்கு பின் தான் தெரிந்து கொண்டேன். என் தகப்பனார் பதிவு அலுவலகம் சென்று உயிலை பதிவு செய்தாரா இல்லையா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. உயிலை நிருபிப்பதற்கு நான் சாட்சிகளை விசாரிக்க உள்ளேனா என்றால் இல்லை. என் தப்பனார் இறக்கும்போது கடையின் மேல் முதல் தளத்தில் கான்கிரீட் தளம் கொண்ட வீடு இருந்தது என்றால் சரிதான். என் தகப்பனார் உயிருடன் இருந்தபோதோ மேல் உள்ள வீட்டிற்கு தனியாக வரி விதிப்பு ஏற்பட்டது என்றால் சரிதான். என் தப்பனார் கையொப்பங்கள் அடங்கிய ஆவணங்களை எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. உயில் சாசனம் உண்மையான ஆவணம் அல்ல என்றும், என் தகப்பனார் எனக்கு உயில் ஆவணம் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. சொத்தின் மதிப்பு மிக்க முன்பகுதியில் உள்ள கடையை அபகறிக்க வேண்டி பொய்யாக உயில் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவாவில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.09.17 01:33:10 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS